பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 2 (18—11—71) வியாழன் வெளியூர்: கார்த்திகை 3 (19—11—71) வெள்ளி [இதழ்: 130

யாகியா கான் பதவி விலகுவார்?

"பாகிஸ்தான் அதிபர் யாகியா கான், பதவியிலிருந்து விலகிக் கொண்டு விடுவது பற்றி யோசனை செய்து வருகிறார்" என்று இங்கு வந்துகொண்டிருக்கும் தகவல்களைப் பற்றி அரசியல் நோக்கர்கள் விமர்சிக்கவில்லை. முன்பு கிழக்குப்பாகிஸ்தான் கவர்னராக இருந்தவரும் மிதவாதியுமானவைஸ்-அட்மிரல் ஆஷானுக்கு ஆதரவாக அவர் பதவியிலிருந்து விலகக்கூடும்.

நலம் விசாரித்த நண்பர்களுக்கு

கலைஞரின் நன்றிச் செய்தி

சென்னை, நவ. 18—

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின்போது தாயகத்திலிருந்து தொலைபேசி--தந்தி--கடிதங்கள் மூலம் நலன் விசாரித்த நண்பர்களுக்குச் சிறப்புச் செய்தி மூலம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்.

17—11 71 அன்று அமெரிக்காவிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுப்பியுள்ள சிறப்புச் செய்தியில் கலைஞர் கூறியிருப்பதாவது:—

"நான் அமெரிக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு -- முதலில் வாஷிங்டன் நகரிலும், பிறகு பால்டிமோர் மருத்துவ மனையில் தங்கியிருக்கும் இந்தச் சமயத்திலும் தமிழ்நாட்டிலிருந்து அமைச்சர் பெருமக்களும்--ஏனைய நண்பர்களும் என்னுடைய நலன் குறித்து விசாரித்துத் தொலைபேசி மூலமாகவும், தந்திகள்--கடிதங்கள் வாயிலாகவும் தங்கள் அன்பினைக் காட்டிவருகிறார்கள்.

"என் உடல்நலம் பற்றி அக்கறையோடு விசாரித்துவரும் அனைவருக்கும் என் மனம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சிகிச்சை முடிந்ததும், என்னுடைய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு நடத்திவிட்டு விரைவில் தமிழகம் திரும்புகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்ளுகிறேன் -- வணக்கம்."

சிகாகோ பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்ற அழைப்பு

அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் அவர்கள், நவ. 22, 23-ம் நாட்களில் சிகாகோ நகருக்குச் செல்லவிருக்கிறார்.

அங்குள்ள பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாற்றுமாறு தமிழக முதலமைச்சர்--அந்தப் பல்கலைக் கழகத்தால் அழைக்கப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் உளவாளிகளுக்குப் பயிற்சிப் பள்ளி

மக்களவையில் தகவல்

ஏற்படக்கூடிய அபாயத்தை அரசு உணர்ந்திருக்கிறது' என அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி நவ. 18—

'சில்ஹெட் மாவட்டத்தில் உளவாளிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பள்ளி ஒன்றை பாகிஸ்தான் நடத்திவருகிறது என்று நம்புவதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது"

என்று, மக்களவையில் உள்நாட்டுத் துறை துணையமைச்சர் ராம்நிவாஸ் மிர்தா, கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"உளவாளிகளாலும் — நாசவேலைக்காரர்களாலும்ஏற்படக்கூடிய அபாயத்தை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது"

என்றும் அமைச்சர் குறிப்பிட்டுக் கூறினார்.

தாய்லாந்தில் இரத்தஞ் சிந்தாப் புரட்சி

அவசர நிலை பிரகடனமாயிற்று

ஆட்சியைக் கைப்பற்றினர் தலைமையமைச்சர்

பாங்காக், நவ. 18—

நீண்ட நாட்களாகத் தாய்லாந்து தலைமையமைச்சராக இருந்துவரும் பீல்டு மார்ஷல் தானம் கிட்டிகாசோன் இரத்தஞ் சிந்தாப் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

உள்நாடு -- வெளிநாட்டிலிருந்து நாட்டை எதிர்நோக்கியிருக்கும் அபாயத்தைக் கருதியே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருப்பதாகத் தலைமையமைச்சர் அறிவித்தார்.

புரட்சிமூலம் நாடாளுமன்றமும் -- அமைச்சரவையும் கலைக்கப்பட்டுவிட்டதாக அவர் அறிவித்தார்.

ஆட்சியைக் கைப்பற்றியதும், தலைமையமைச்சர் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

இனிமேல் தமது புரட்சிக் கட்சியே ஆட்சிப் பொறுப்பைக் கவனிக்கும் என்றும், இதற்கு முப்படைகளின் முழு ஆதரவும் இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

தாய்லாந்து முழுவதிலும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

தலைமையமைச்சர் கிட்டிகாசோன் தலைமையில் தாய்லாந்து ஆயுதப் படைகள் அமைத்துள்ள புரட்சிக் கட்சி, இத்தகவலைத் தாய்லாந்து வானொலியில் அறிவித்தது.

புரட்சிக் கட்சி தாய்லாந்தில் அரசாங்க அதிகாரத்தை மேற்கொண்டுவிட்டதாகவும் வானொலி தெரிவித்தது.

நாடு நெடுகிலும் இராணுவ -- போலீஸ் படைகள் எச்சரிக்கை நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அரசுப் பஸ்களை நிர்வகிக்கத் தனிக் கார்ப்பரேஷன்

பழங்காலத் தமிழ் வேந்தர்களின் பெயர்கள் அந்நிறுவனங்களுக்குச் சூட்டப்படும்

சென்னை, நவ. 19—

சென்னை நகரம் -- புறநகர்ப் பகுதிகள் -- செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றில் ஓடும் அரசு பஸ்கள் தனியாக அமைக்கப்படவிருக்கும் ஒரு கார்ப்பரேஷன் நிர்வாகத்தின் கீழ்வரும்; இதற்கு, பல்லவப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்று பெயரிடப்படும்.

மதுரையில் மேற்கொள்ளப்பட்ட (தேசியமயமாக்கப்பட்ட) டி.வி.எஸ். பஸ் போக்குவரத்தை நிர்வகிக்கத் தனிக் கம்பெனி ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது; இதற்குப் 'பாண்டியன் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்று பெயரிடப்படுகிறது.

இந்தப் பஸ் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்களின் தலைவர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்; 'பல்லவப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் சென்னை -- செங்கற்பட்டு அரசுப் பஸ்களுக்கான நிறுவனத்தின் தலைவராகத் தற்போது பஸ் போக்குவரத்து இயக்குநராக உள்ள கே. ஜே. எம். ஷெட்டி நியமிக்கப்படுவார்.

'பாண்டியன் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் மதுரையில் அமையும் நிறுவனத்திற்கு எஞ்சினீயரிங் தொழில் நுட்பம் அறிந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார்.

"நகர பஸ் போக்குவரத்தின் திறமையை அதிகரிக்கவும் -- தேசியமயத் திட்டத்தின்கீழ் புதிதாக மேற்கொள்ளப்பட்ட பஸ் நிறுவனங்களை நிர்வகிக்கவும் தனி வாரியங்கள் (கார்ப்பரேஷன்) அமைக்கப்படும்" என்று தமிழக அரசு அறிவித்திருந்தது; அதன்படி இப்போது, 'பஸ் நிர்வாகக் கார்ப்பரேஷன்' அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கார்ப்பரேஷன்களுக்குப் பழங்காலத் தமிழ் வேந்தர்கள் பெயரிடப்படும்.

இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இந்தப் பஸ் கார்ப்பரேஷன்கள் பதிவு செய்யப்படும்.

இப்போது 2 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவற்றில் ஒன்று—சென்னை, செங்கற்பட்டு (சென்னை புறநகர்ப் பகுதிகளில் ஓடும் பஸ்கள் உட்பட) பகுதிகளில் ஓடும் பஸ்களுக்காகத் தனிக் கம்பெனி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுக்கு இயக்குநர் போர்டும் -- ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்படும்.

சென்னையில் அமையவிருக்கும் 'பல்லவப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' நிர்வாகத்தின்கீழ் 1,200 பஸ்களும், மதுரையில் அமையும் பாண்டியன் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் நிர்வாகத்தின்கீழ் 200 பஸ்களும் வரும் என்று அறியப்படுகிறது.

இவை முழுக்க முழுக்க மாநில அரசின் நிறுவனங்களாகவே இருக்கும்; மத்திய அரசின் பங்கு இராது.

காயிதே மில்லத் உடல்நலம்

புதுடில்லி, நவ. 18—

முஸ்லிம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் படிப்படியாக உடல் நலம் பெற்றுவருகிறார்.

அவர் தற்போது மிகவும் பலவீனமாக இருப்பதால் இன்னும் சில நாட்களுக்கு அவர் மருத்துவமனையிலேயே தங்கியிருக்க வேண்டும் என டாக்டர்கள் அவருக்கு ஆலோசனை கூறியிருக்கின்றனர்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படுமா?

வங்க தேச அகதிகளால் பாதிப்பு ஏற்படக்கூடும்

புதுடில்லி, நவ. 18—

"வங்க தேச அகதிகளுக்கு உணவு வழங்கிக் கொண்டிருப்பது, உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறுவதைப் பாதிக்குமா? என்பதை இப்போது சொல்வதற்கில்லை"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் சமர் குஹா கூறினார்.

"எதிர்பார்க்கின்றபடி, வங்க தேச அகதிகள் திரும்பாவிட்டால் அவர்களுக்கு உணவு வழங்கும் அதிகப்படி பொறுப்பு நாட்டின் உணவு வசதியை பாதிக்கக்கூடும்" என்றும் அவர் சொன்னார்.

சென்னையில் டெலிவிஷன் நிலையம்

1974-ல் இயங்கத் துவங்கும்

புதுடில்லி, நவ. 18—

'சென்னை டெலிவிஷன் நிலையத்துக்கான கட்டட வேலையும் -- சாதனங்கள் கொள்முதலும் -- 1972—73-ல் முடிந்துவிடும்.

"டெலிவிஷன் அமைப்புப் பணி முடிந்ததும் 1973—74-ல் டெலிவிஷன் நிலையம் இயங்கும்.

"இத்திட்டத்துக்கு மொத்தம் ரூ. 1,82,76,000 செலவாகும்"

என்று மக்களவையில், தி. மு. கழக உறுப்பினர் பி. ஏ. சாமிநாதன் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், தகவல் -- ஒலிபரப்புத் துணையமைச்சர் நந்தினி சத்பதி தெரிவித்தார்.

மருந்துகள் பரிசோதனைக் கூடம்—சென்னையில் அமையும்

தஞ்சவூர், நவ. 18—

சென்னையில் மருந்துகள் பரிசோதனைக்கூடம் ஒன்றை அமைப்பது பற்றித் தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்துவருகிறது.

"இந்தப் பரிசோதனைக்கூடத்தை அமைக்க ரூ 10 இலட்சம் செலவாகலாம்"

என்று உதவி மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி சி. வி. நரசிம்மன் கூறினார்.

மத்திய அரசின் அமைச்சுத் துறைகளில் அதிக ஊழியர்கள்

ஆராய வேண்டுமென வலியுறுத்தல்

புதுடில்லி, நவ. 18—

"மத்திய அரசு அமைச்சகத்தைச் சேர்ந்த துறைகள் ஒவ்வொன்றிலும் ஊழியர்கள் எண்ணிக்கை உபரியாக உள்ளது; எவ்வளவு ஊழியர்கள் உபரியாக உள்ளனர் என்பதைத் தனிப்பட்ட குழு ஒன்றைக் கொண்டு ஆராய வேண்டும்; பின்னர் உபரியாக உள்ள ஊழியர்களுக்கு என்ன வேலை கொடுப்பது -- எவ்வாறு பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி அமைச்சரவைச் செயலகம் ஆராய வேண்டும்"

என்று பொதுக் கணக்குக் குழு தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

"இப்பிரேரணைகளை ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்வரையில் புதிய பதவிகள் எதையும் அரசு ஏற்படுத்த வேண்டும்" என்றும் குழு கேட்டுக் கொண்டிருக்கிறது.

பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்—நிர்ணயிக்கக் குழு அமைப்பு

அமைச்சர் என். வி. நடராசன் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முடிவு

சென்னை, நவ. 18—

நவ. 17-ம் நாளன்று கோட்டையில் திருச்சிராப்பள்ளி பீடித் தொழிலாளர் ஊதிய உயர்வு பற்றிய தொழில் தகராறில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தைகளின் முடிவாக பீடித் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய விரைவில் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயக் குழு ஒன்றினை அமைப்பது என்றும், அக்குழு தனது அறிக்கையை 6-மாத காலத்திற்குள் அரசுக்கு தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும், அவ்வறிக்கையின்மீது அரசு முடிவெடுக்கும் வரையில் திருச்சி பீடித் தொழிலாளருக்கு நவ. 17-ம் நாள் முதல் 1,000 பீடிக்கு ரூ. 3.20-க்குப் பதிலாக ரூ 3.25 என்று கணக்கிட்டு ஊதியம் தரப்பட வேண்டும் என்றும் அரசின் சார்பில் அமைச்சர் அவர்களால் முடிவு செய்யப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில் தொழிலதிபர்கள் சார்பில் திரு. அப்துல் ரசித் அவர்களும்—மற்ற நிர்வாகிகளும், தொழிற் சங்கங்களின் சார்பில் எஸ் ஏ. ஜி. இராபி, மலர் மன்னன், வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., அப்துல் காதர், இராசகோபால், கவியராஜ், ஆர். சுருப்பையா, டி. எம். ஏ. உசேன், தாஜ் முகமது ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும், தொழிலாளர் தலைவர் திரு. ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களும் பேச்சுவார்த்தையின் போது கலந்துகொண்டனர்.

வாழ்த்திதழ்கள் அச்சடிப்பதற்குப் பணம் செலவழிப்பதா?

இந்திரா காந்தி கண்டனம்

புதுடில்லி, நவ. 18—

"பண்டிகைகள்—பிறந்த நாள் போன்ற சமயங்களில் வாழ்த்து இதழ்களை அச்சடிப்பதற்காக மக்கள் ஏராளமான பணத்தைச் செலவழிப்பதா" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி கண்டித்தார்.

"நாட்டில் இப்போது சிரமமான நிலைமை இருக்கும்போது இத்தகைய செலவுகள் தவிர்க்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

"அரசைப் பொறுத்தவரையில், அரசாங்க அதிபர்களுக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்புவதைத் தவிர மற்றபடி இத்தகைய காரியங்களுக்கு பணத்தைச் செலவழிப்பதில்லை" என்றார்.

ரிசர்வ் பாங்கியிடம் அதிகப் பற்று

8 மாநிலங்கள் ரூ 254 கோடி வாங்கியிருக்கின்றனவாம்

புதுடில்லி, நவ. 17—

1971 நவம்பர் 5-ம் நாள் வரையில் 8 மாநிலங்கள் மொத்தம் ரூ. 254 கோடிக்கு ரிசர்வ் பாங்கியிடமிருந்து அதிகப் பற்று வாங்கியிருக்கின்றன.

1971–72-ம் ஆண்டுக்கான மாநில வரவு – செலவுத் திட்டங்களில் ஈடு செய்யப்படாமல் விடப்பட்ட துண்டுவிழும் தொகை ரூ. 204 கோடியாகும்.

நாடாளுமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணையமைச்சர் கே. ஆர். கணேஷ், இத்தகவலைத் தெரிவித்தார்.

அதிகப் பற்றுக்களைக் குறைப்பதற்கான வழிவகைகள் பற்றிப் பரிசீலிப்பதற்காக மாநிலங்களின் முதலமைச்சர்களுடனும், கவர்னர்களுடனும் பேச்சு நடந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த மாநிலங்களும் அவை வாங்கிய அதிகப் பற்றும் வருமாறு:—

	கோடி
ஆந்திரம்	ரூ. 44.59
இராசஸ்தான்	ரூ. 44.83
தமிழ்நாடு	ரூ. 58.66
மைசூர்	ரூ. 40.62
மாராட்டிரம்	ரூ. 29.63
கேரளம்	ரூ. 24.73
பீகார்	ரூ. 8.08
அசாம்	ரூ. 2.90

இரயில்வே அதிகாரிகளுக்குத் தனிச் சலூன்கள் ஏன்?

"இரயில்வே அதிகாரிகள் தனிச் சலூன்களைப் (நவீன வசதிகள் உள்ள இரயில் பெட்டிகள்) பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்"

என்று இரயில்வே அமைச்சர் கே. அனுமந்தையா, மக்களவையில் உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார்.

"அதிகாரிகள் சுற்றுப்பயணம் செய்யும்போது, தங்கள் குடும்பத்தினரைக்கூட அழைத்துச் செல்லும் பிரச்சினையில் கடுமையான கருத்துக்களைக் கொள்ள வேண்டாம்" என்று அவர் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

"இரயில்வே அதிகாரிகள் அலுவல்கள் காரணமாகச் சுற்றுப் பயணம் செல்லுகையில் 1,000-த்துக்கும் அதிகமாக—வசதிகள் உள்ள இரயில் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர்; பல்வேறு நிலையங்களிலும் அவர்களுக்கு ஓரளவுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்; அந்த நிலையங்களில் வசதிகளைத் செய்து தருவதற்கு ஆகும் செலவைப் பார்க்கும்போது அந்த வசதிகள் உள்ள இரயில் பெட்டிகள் எவ்வளவோ மலிவானது" என்று அமைச்சர் கூறினர்.

"அலுவல்கள் காரணமாக அதிகாரிகள் சுற்றுப்பயணம் செய்யும்போது, அவர்கள் தங்கள் மனைவிமார்களை மட்டுமே அழைத்துச் செல்லலாம்; ஆனால் அவர்கள், தங்கள்கூட ஓரிரு குழந்தைகளை அழைத்துச் செல்வதைப் பெரிதாகக் கருத வேண்டாம்" என்றார் அமைச்சர்.

மக்களவையில் ...

விலைவாசிகள் உயர்வுக்குக் கடும் எதிர்ப்பு

குறுகிய - நீண்டகால நடவடிக்கைகளால் விலைவாசி குறையும்

அமைச்சர் தரும் நம்பிக்கை

புதுடில்லி, நவ. 17—

சாதாரண மனிதனால் சமாளிக்க முடியாத அளவுக்கு இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகள் அதிகரித்திருப்பது குறித்து மக்களவையில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

"இதகுறித்து உறுப்பினர்களின் கவலையை அரசு பகிர்ந்து கொண்டாலும், இப்போது எடுக்கப்படுகின்ற குறுகிய கால—நீண்ட கால நடவடிக்கைகள் மூலம், வருகின்ற மாதங்களில் விலைவாசி குறைந்துவிடும்" என்று நிதியமைச்சர் சவாண் நம்பிக்கை தெரிவித்தார்.

"துணி விலைகள் ஒழுங்குபடாவிடில் அரசே வாங்கி வைத்து வழங்கும்; இதேபோன்று, உணவுத் தானிய விநியோக முறையும் பலப்படுத்தப்படும்" என்றும் அவர் சொன்னர்.

'விலைவாசி உயர்வை எதிர்த்து மக்களே இயக்கம் நடத்தலாம்' என்று சவாண் யோசனை கூறினர்; 'இது, அரசு தனது பொறுப்பைக் கைகழுவுவதாகும்' என்று உறுப்பினர்கள் கூறினர்.

"முக்கிய உணவுத் தானியங்கள் நியாய விலைக் கடைகள் மூலம் குறிப்பிட்ட விலைகளுக்கு விற்கப்படுகின்றன; விநியோக ஏற்பாடுகளைப் பலப்படுத்துமாறும் மாநிலங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர, எண்ணெய் வித்துக்கள், பருத்தி—பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க எடுக்கப்பட்டு வரும் நீண்ட கால நடவடிக்கைகள் காரணமாக வருகின்ற மாதங்களில் விலைவாசிகள் திட்டமாகக் குறையும் என எதிர்பார்க்கலாம்."

கைத்தறித் துணி ஏற்றுமதி—மத்திய அரசு ஏற்காதாம்

சென்னை, நவ. 17—

கைத்தறித் துணி ஏற்றுமதியை மத்திய அரசு மேற்கொள்ளாது என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பருத்தித் துணியை அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டம் பற்றி பரிசீலித்த ஆய்வுக் குழு, கைத்தறி ஏற்றுமதித் திட்டத்தை அதன் வரம்பிலிருந்து ஒதுக்கி விட்டதாகத் தெரிகிறது.

இலண்டனில் மனோகரன்

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் அக்கறை செலுத்தினர்

ஆளும் கட்சி—எதிர்க் கட்சி உறுப்பினருடன் விவாதம்

இலண்டன், நவ. 17—

ஒரு வார காலச் சுற்றுப்பயணம் செய்வதற்காக அரசு அழைப்பின்பேரில், மக்களவை தி.மு.க. தலைவர் திரு. கி. மனோகரன், சென்ற வாரம் இலண்டனுக்கு வந்திருந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளிடையே, நாடாளுமன்ற (காமன்ஸ் சபை) கேள்வி நேரத்தில் அக்கறை காட்டிய அவர், தவருமல் அந்த நேரத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு வந்து சிறப்புப் பார்வையாளர் இடத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளைக் கவனித்தார்.

அரசியல் கட்சி—அதிலும் ஆளும் கட்சி எவ்வாறு இயங்கிவருகிறது என்பதறிய ஆவலை கொண்ட அவர், பிரிட்டிஷ் ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் மத்திய நிலைய அலுவலகத்திற்குச் சென்று வந்தார்.

குறிப்பிட்ட துறைகளில் தனிக் கவனம் செலுத்தி—சிறப்பிடம் வகிக்கும் பலதரப்பட்ட பிரிட்டிஷ் எம்.பி.-க்களுடனும் கலந்து பேசினர்; ஆளும் கட்சி—முக்கிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரைச் சந்தித்து, பல்வேறு அரசியல் விவகாரங்கள் குறித்து விவாதித்தார்.

பிரிட்டனின் நெடுநாளைய மரபுப்படி, நாடாளுமன்றக் கூட்டத்திற்கு அவைத் தலைவரை ஊர்வலமாக அழைத்துவரும் காட்சியை அவர் கண்டார்.

சனநாயக முறைகளில் சிறப்பிடம் வகிக்கும் பிரிட்டனில், சில மரபுகள் மாருமல்—திரியாமல் போற்றப்படுவதைக் கண்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

திரு. மனோகரனைச் சிறப்பிக்க, பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு விருந்து ஒன்று அளித்தனர்.

ஒன்றன்பின் ஒன்றாக அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதேன்?

மக்களவை — மேலவையில் கடும் எதிர்ப்பு

அரசுக்கு அவைத் தலைவர்கள் யோசனை

புதுடில்லி, நவ. 18—

"இரண்டுமாத காலத்திற்குள் மத்திய அரசு ஒன்றன்பின் ஒன்றாகப் பல அவசரச் சட்டங்களைப் பிறப்பித்திருக்கிறது; இது போன்ற அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கும்படியான அவசரம் ஏன் ஏற்பட்டது என்பதை அரசு விளக்கிக் கூறவேண்டும்"

என்று மக்களவையில், அவைத் தலைவர் ஜி. எஸ். தில்லான், சுட்டிக் காட்டிக் கேட்டுக்கொண்டார்.

அவசரச் சட்டங்கள் பற்றி சபையில் விவாதம் நடத்த வேண்டுமென்று ஜனசங்கத் தலைவர் ஏ. பி. வாஜ்பேயர் கோரியதை யடுத்து அவைத் தலைவர் இவ்வாறு கூறினர்; தலைமையமைச்சருடன இதைப் பற்றித் தான் நேரில் பேசுவதாகவும் வாக்களித்தார்.

"அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கும் பிரச்சினையில், சில நடைமுறைகள் இருக்கின்றன; அவற்றைப் புறக்கணிக்க முடியாது" என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

நாடாளுமன்ற மேலவையில்:

கூடுதல் வரி விதிப்புக்காக அரசாங்கம் மூன்று அவசரச் சட்டங்களை பிறப்பிப்பதை நாடாளுமன்ற மேலவையில் எல்லா எதிர்க்கட்சியினரும் கடுமையாகத் தாக்கினர்; இது, நாட்டில், நாடாளுமன்ற சனநாயகத்தை இழிவுபடுத்துவதாகும்' என்று அவர்கள் கூறினர்.

அவையின் கூட்டத் தொடர் நடைபெருத காலத்தில், குடியரசுத் தலைவரால் பிரகடனம் செய்யப்பட்ட 13 அவசரச் சட்டங்களை அவையில் தாக்கல் செய்ய நாடாளுமன்ற விவகாரத் துணையமைச்சர் ஓம் மேத்தா முயன்ற போது, ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்வது சம்பந்தமாக அரசியல் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தவருகப் பயன்படுத்தப்படுவதாக உறுப்பினர்கள் கூறினர்.

கூடுதல் விற்பனை வரி — இரயில் கட்டணங்கள் — அஞ்சல் கட்டணங்கள்மீது கூடுதல் தீர்வை ஆகியவற்றுக்கு வகை செய்யும் அவசரச் சட்டங்களுக்குக் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

நாடாளுமன்ற சனநாயகக் கொள்கைகளை அரசாங்கம்மீறியதாகவும், வேண்டுமென்றே நாடாளுமன்றத்தை அவமதித்ததாகவும் பல உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்; நாடாளுமன்றம் கூடுகின்ற நாளான 15-ந் தேதியன்று இந்த அவசரச் சட்டங்கள் நடைமுறைக்கு வரும் என்று அரசாங்கம் தெரிந்தே நிர்ணயித்ததாக உறுப்பினர்கள் கூறினர்; 'அரசாங்கத்தை அவைத் தலைவர் கண்டிக்க வேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்தினர்.

வரையறையின்றி வெளியிடக்கூடாது

"அவசரச் சட்டங்களை வரையறையின்றி வெளியிடும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டாம்"

என்று துணைத் தலைவர் பி. டி. கோமரகாடே அரசாங்கத்தை வற்புறுத்தினர்; இத்தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"எல்லா எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தெரிவித்த கடுமையான உணர்வுகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்று நம்புகிறேன்.

"அவசரச் சட்டங்களை வெளியிடுவது அவசியமாக இருக்குமானுல் மிக அபூர்வமான சந்தர்ப்பங்களில் இந்த நடைமுறையை அரசாங்கம் பயன்படுத்தவேண்டும்; ஆனுல், அவசரச் சட்டங்களை வெளியிடவும்—அவற்றை அவையில் தாக்கல் செய்யவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு."

அந்நியர் மூலதனம்

அனுமதிக்கும் கொள்கையில் மாறுதல் இல்லை

நிதியமைச்சர் தெளிவுரை

புதுடில்லி, நவ. 18—

"பொறுக்கான அடிப்படையில் அந்நியர் மூலதனத்தை அனுமதிப்பது என்ற அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையில் மாறுதல் ஏதும் இல்லை"

என்று நிதியமைச்சர் சவாண் நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"இப்போதைய கொள்கையால் ஏற்கனவே அந்நியர் ஆதிக்கம் அதிகமாக உள்ள கிளைகளிலும், துணைக் கம்பெனிகளிலும் மூலதனம் குறைந்துள்ளது; இதனுல் மூலதனத் தன்மையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது; இது வரவேற்கத்தக்க போக்காகும்."

"சில பொறுக்கான பகுதிகளில் இந்நிய மூலதனத்தை இந்தியா வரவேற்கிறது" என்று கூறிய அமைச்சர், அந்நிய தனியார் மூலதனம் குறைந்துவிட்டது என்ற புகாரை மறுத்தார்.

"இந்தியாவில் உள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக முதலீடு செய்யத் தயக்கம் காட்டப்படுகிறதா" என்று சீதாராம் கேசரி கேட்டார்.

"நிலையற்ற தன்மை போன்ற எந்தப் பிரச்சினையும் முதலீடு செய்வதற்குத் தடையாக இருப்பதாக நான் நினைக்கவில்லை" என்று நிதி அமைச்சர் கூறினர்; "அண்மையில் இந்தியா வந்திருந்த பிரெஞ்சு அரசாங்கக் குழு ஒன்று இந்தியாவில் உள்ள முதலீட்டுச் சூழ்நிலை பற்றி மனநிறைவுடன் திரும்பிச் சென்றிருப்பதாக நினைக்கிறேன்" என்றார் அமைச்சர்.

"அந்நிய மூலதனத்துக்குத் தூண்டுகோல் அளிப்பது சம்பந்தப்பட்ட வரையில், இந்தியாவுக்கு அந்நிய மூலதனம் வந்தால் அதற்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதில்லை; மேலும் இலாபங்களையும்—டிவிடெண்டுகளையும் தங்கள் நாட்டுக்கு அனுப்பத் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது" என்றார்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், 'இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் இலாபங்களும்—டிவிடெண்டுகளும் அதிகரிக்கவில்லை; எனினும் இவற்றிற்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்ற யோசனை பரிசீலிக்கப்படலாம்' என்றார்.

துணி ஏற்றுமதி வர்த்தகம்

முழுவதையும் அரசே ஏற்க முடிவு

மத்திய அமைச்சர் மிச்ரா தகவல்

புதுடில்லி, நவ. 17—

"துணி ஏற்றுமதித் தொழிலை அரசுத் துறை மூலம் நடத்துவதென்று மத்திய அரசு கொள்கையளவில் முடிவு செய்திருக்கிறது.

"இந்த மாறுதலால் சிக்கல் ஏற்படாதிருக்கும் பொருட்டு, கொஞ்ச காலத்துக்குத் தற்போதைய ஏற்றுமதியாளர்களின் சேவையை அரசு வைத்துக் கொள்ளும்; என்றும், பிறகு அரசுத் துறையே முழுதும் நடத்தும்"

என்று ஏற்றுமதி வர்த்தகத்துறை அமைச்சர் எல். என். மிச்ரா, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"துணி ஏற்றுமதியை அரசு மேற்கொள்ளும் திட்ட விவரங்கள் குறித்து ஆய்வுக் குழுவின் அறிக்கை சில வாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது; அதன் பின் அரசு துரிதமாக முடிவு செய்துவிடும்; அரசு மேற்கொள்ளத் தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

"போட்டியைச் சமாளித்துக் குறித்த காலத்தில் சப்ளை செய்ய அரசுத் துறையால் முடியாது என்று சொல்லப்படுவதை ஒப்புக்கொள்ள இயலாது.

"துணித் தொழில் இடர்ப்பாடான நிலையில் உள்ளது; அதற்குத் தேவைப்படும் மாபெரும் உதவியை அரசினுல்தான் அளிக்க முடியும்; நவீனமயமாக்க வேண்டிய முதலீடு செய்ய தனியார் துறையால் இயலாது"

"துணித் தொழிலை அரசு மேற்கொண்டுவிடலாம்" என்று சிலர் கூறினர்.

"அம்மாதிரி எண்ணம் எதுவும் கிடையாது; நாட்டில் சுமார் 360 ஆலைகள் உள்ளன; அவ்வளவையும் மேற்கொள்வதென்பது அவ்வளவு எளிதாக நடந்துவிடக்கூடியது அல்ல" என்று அமைச்சர் பதிலளித்தார்.

தமிழ் நாளிதழ்களுக்கு இலங்கையில் தடை

மக்களவையில் கேள்வி—அமைச்சர் தந்த பதில்

புதுடில்லி, நவ. 17—

சில தமிழ்ப் பத்திரிகைகளை இலங்கையில் இறக்குமதி செய்யக் கூடாது என இலங்கை அரசு தடைவிதித்திருப்பது பற்றி இங்குள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது; இலங்கை சர்க்காருடன் இதுபற்றி மேற்கொண்டு விவாதிக்கப்படும்"

என்று மக்களவையில், வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

விஞ்ஞான முறையில் வேளாண்மை வளர்ச்சி

தமிழக அரசின் ஆர்வம்—அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், சி. பா. ஆதித்தனர் விளக்கம்

டாக்டர் சாமிநாதன் பாராட்டு விழாவில் உரைகள்

சென்னை, நவ. 15—

விவசாயத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான டாக்டர் எம். எஸ். சாமிநாதன் அவர்கட்கு—அவருடைய ஆராய்ச்சிகளுக்காகப் பல நாடுகள் கௌரவப் பட்டங்கள் வழங்கியிருக்கின்றன.

அண்மையில் அவருக்கு 'மாகசேசே' பரிசு கிடைத்தது. பிலிப்பைன் நாட்டு அதிபராக இருந்து காலஞ்சென்ற 'ரேமன் மாகசேசே' என்பவரின் பெயரால் இந்தப் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

ஆராய்ச்சித் துறையில் சிறந்த கண்டு பிடிப்புகளைச் செய்யும் விஞ்ஞானிகளுக்கு 'மாகசேசே' பரிசு கிடைப்பது மிகப் பெரும் கவுரமாகக் கருதப்படுகிறது.

உலகம் புகழ்பெற்ற விவசாய விஞ்ஞானியான டாக்டர் சாமிநாதன் 'மாகசேசே' பரிசு பெற்றதைப் பாராட்டும் வகையில் தமிழக அரசின் கூட்டுறவுத் துறையும்—வேளாண்மைத் துறையும் கூட்டாகச் சேர்ந்து பாராட்டு விழா நடத்தின; (டாக்டர் சாமிநாதன் கும்பகோணத்தைச் சேர்ந்தவர்; கோவை விவசாயக் கல்லூரியில் பயின்றவர்; இப்போது இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழக இயக்குநராக இருக்கிறார்).

சி. பா. ஆதித்தனர்

விழாவுக்கு வந்திருந்தவர்களைக் கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனர் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:—

"டாக்டர் சாமிநாதன், தமிழ்நாட்டுக்கு—இந்தியாவுக்கு மட்டுமன்றி மனிதகுலத்துக்கே சொந்தமானவர்; அத்தகைய ஒருவர் நமது நாட்டைச் சேர்ந்தவர் என்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

தமிழ்நாட்டில் விவசாயத்துக்குத் தண்ணீர் போதவில்லை. இலங்கையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் மழை மேகங்களைத் தடுத்துவிடுகின்றன; ஆகவே நமக்கு மழையும் போதவில்லை.

இந்நிலையில், தண்ணீரைக் குறைவாகச் செலவிட்டு எப்படிப் பயிர் வளர்க்கலாம் என்பதே நமது கவலையாக இருக்கிறது.

நிலத்துக்கடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவந்து அதனை எந்தப் பயிருக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதை எல்லாம் நாம் ஆராய்ச்சி பூர்வமாகக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இத்தகைய துறைகளில் டாக்டர் சாமிநாதனுடைய அரிய ஆராய்ச்சியின் பயன்கள் நமக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கத் தக்கனவாகும்."

அன்பில் தர்மலிங்கம்

விழாவுக்குத் தலைமை தாங்கிய வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கூறியதாவது:—

'உயிர்ப் பாதுகாப்புப் போலவே பயிர்ப் பாதுகாப்பும் மனிதனுக்கு மிக முக்கியமானதாகும். அத்தகைய பயிர்ப் பாதுகாப்புத் துறையில் புகழ்பெற்ற டாக்டர் சாமிநாதனைப் பாராட்ட ஒரு வாய்ப்பு கிடைத்தது பெருமகிழ்ச்சியாகும்.

சாமிநாதனை உலகம் பாராட்டினும் தாம் தருகின்ற பாராட்டு தாய் தரும் பாராட்டுப் போன்றதாகும்.

தமிழ்நாட்டில் விவசாயத் துறையில விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் செயலில் நடத்தப்பட்டு வருகின்றன.

நெற்பயிர் வளர்ச்சியில் பல கட்டங்களைத் தாண்டியுள்ளோம்; 'கருணை' நெல் இப்போது ஏக்கருக்கு மூன்றரை டன் கண்டு முதலாகி இருக்கிறது; இது வெறும் காகிதக் கணக்கு அல்ல; நானே நேரில் சென்று ஒரு ஏக்கரில் அறுத்து அடித்து அளந்து பார்த்தேன்.

அதேபோல், பல துறைகளில் ஆராய்ச்சி முடிவுகளைச் செயல்படுத்தக்கூடிய சிறப்பான அதிகாரிகளையும் விவசாயிகளையும் நாம் பெற்றுள்ளோம்.

பக்கத்து வயலில் விளைச்சல் அதிகரித்திருந்தால், பக்கத்து வயலில் இருக்கும் விவசாயி அதனைக் கண்டு ஏங்கியிருந்த காலம் போய், 'என்ன காரணத்தினுல் விளைச்சல் அதிகரித்திருக்கிறது' என்று கண்டு—அதனைத் தனது வயலில் கடைபிடிக்கும் நிலைமைக்கு விவசாயி வளர்ந்திருக்கிறான்.

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியில் நாம தன்னிறைவை எட்டிவிட்டோம்; ஆனுல், பருப்பு வகைகளில் தன்னிறைவு எய்த முடியவில்லை; இதற்காக ஒரு கோடி ரூபாயை அவசரத் திட்டத்துக்கு அரசு ஒதுக்கியிருக்கிறது.

இத்தகைய துறைகளில் டாக்டர் சாமிநாதன் போன்ற விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்புகளைச் செயல்படுத்தத் தமிழக அரசு மிகுந்த ஆர்வமுடன் பணியாற்றும்."

கூட்டுறவுச் சங்கச் சார்பில் வரவேற்பு இதழ் ஒன்றைத் துணைத் தலைவர் கொளத்தூர் கோதண்டம், டாக்டர் சாமிநாதனுக்கு வாசித்தளித்தார்.

விவசாயத் துறையின் சார்பில் வெள்ளிக் கேடயம் ஒன்றை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பரிசாக அளித்தார்.

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி கூறி டாக்டர் சாமிநாதன் உரையாற்றினர்.

'விவசாயத் துறையில் புதிய முன்னேற்ற வாய்ப்புக்கள்' என்ற பொருள்பற்றி ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஒன்றை அவர் நிகழ்த்தினர்.

வண்ணச் சிலைடுகளின் உதவியுடன் அவர் தமது சொற்பொழிவை நிகழ்த்தினர்.

நிலையான உற்பத்திக்கு வகை காண வேண்டும்

டாக்டர் சாமிநாதன், உற்பத்தித் திறன்பற்றிக் குறிப்பிடுகையில் வலியுறுத்தியதாவது:—

"நிலையான உற்பத்தித் திறன் இணைந்து இருக்கக்கூடிய வகையில் நமது விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளும் அமையவேண்டும்.

"இரு ஆண்டுகளுக்குமுன்பு அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்த பிலிப்பைன்சு, இந்த ஆண்டில் அரிசியைப் பெரும் அளவில் இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது; இதற்குக் காரணம் புயல் கொடுமையேயாகும்; இது நமக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கிறது.

"நல்ல பருவ காலத்தில் நாம் நல்ல உற்பத்தியைச் செய்வதோடு மட்டுமன்றி நிலையான உற்பத்திக்கும் வகை செய்ய வேண்டும்."

விவசாயத் துறை இயக்குநர் வேதநாராயணன் நன்றி கூறினர்.

பலன் தரத்தக்க திட்டங்களுக்குத் தமிழக அரசு நிதியுதவி

தயக்கமின்றிக் கிணறுகள் வெட்ட விவசாயிகள் முன்வர வேண்டும்

தண்ணீர் கிடைக்காமற் போனுல் நிவாரண நிதியிலிருந்து நட்டஈடு

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனர் கூறும் உறுதி—ஊற்று நீர் பற்றிய கருத்தரங்கில் அன்பில் தர்மலிங்கம் பங்கேற்பு

கோவை, நவ. 18—

"தமிழ்நாட்டில் வேளாண்மையை மேம்பாடு செய்வதற்காகப் பலன் தரத்தக்க—பயன்மிக்க திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

"உலக பாங்கி—அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனம் ஆகியவை பூமிக்கடியிலுள்ள ஊற்று நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றன; அவற்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில, 'பாசனத்துக்காக வெட்டப்படும் கிணறுகளுக்கிடையே குறைந்தபட்சம் குறிப்பிட்ட தூரம் இடைவெளி இருக்கவேண்டும்' என்ற நிபந்தனை இருக்கிறது; இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"விவசாயிகள் கிணறு வெட்டி—நீர் கிடைக்காமல் போனுல், அவர்களுக்கு நட்டஈடு கருவதற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு நிவாரண நிதி ஏற்படுத்தியிருக்கிறது"

என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனர் அவர்கள் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

பூமிக்கடியிலுள்ள ஊற்று நீர் பற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்—தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஆகியவை கூட்டாக ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் கருத்தரங்கை அமைச்சர் துவக்கிவைத்துப் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்த நிவாரண நிதியில் ரூ 60 இலட்சம் இருக்கிறது; இவ்வாண்டு அந்த நிதிக்கு அரசு மேற்கொண்டு ரூ. 12 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது; எனவே, விவசாயிகள் தயக்கமின்றி கிணறுகள் வெட்டும் வேலையில் ஈடுபடலாம்."

அன்பில் தர்மலிங்கம்

கருத்தரங்குக்குத் தலைமை வகித்த வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், ஏழை விவசாயிகள் சுலபமாகக் கைக்கொள்ளக்கூடிய திட்டங்களை வகுக்குமாறு கருத்தரங்கில் கலந்து கொள்வோரைக் கேட்டுக்கொண்டார்.

"கூட்டுறவுத் துறைப் பல திட்டங்களை வகுத்திருந்தும், அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதிலுள்ள சிரமங்கள் காரணமாக, விவசாயிகளில் 36 சதவிகிதத்தினரே அவற்றைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்" என்றும் அவர் சொன்னர்.

தமிழ்நாட்டின் இயந்திரச் சாதனங்கள்

ஈரானுக்கு ஏற்றுமதி

மத்திய அரசுக்கு அமைச்சர் செ. மாதவன் கோரிக்கை

சென்னை, நவ. 18—

ஈரானில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கான இயந்திரச் சாதனங்களைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த 'காவேரி ஸ்டரக்சுரல்ஸ்' என்னும் நிறுவனம் தயாரிக்கிறது; இந்தச் சாதனங்களின் முதல் தொகுதி, கடந்த திங்களன்று சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

சென்னை துறைமுகத்தில் நடைபெற்றதோர் விழாவில் தமிழ்நாடு தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் இந்த ஏற்றுமதியைத் தொடங்கி வைத்தார். ஏற்றுமதி செய்வதற்காக இந்தியாவிலேயே இந்தச் சாதனங்கள் தயாரிக்கப்படுவது இதுதான் முதல் முறையாகும்.

வெளிநாட்டு நிறுவனம் எவற்றினுடையவும் ஒத்துழைப்பின்றிஇந்த நுட்பமான சாதனங்களைத் தயாரிப்பதற்காக ஆலை நிர்வாகத்தினரையும்—ஊழியர்களையும்—நிபுணர்களையும் தொழில் அமைச்சர் செ. மாதவன் பாராட்டினர்.

"தனியார் துறையின் வளர்ச்சிக்கு தமது அரசு எல்லா ஆதரவும் அளிக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"இரும்புப் பற்ருக்குறை அதிகரித்து வருகிறது; இதை நிறைவு செய்ய, உருக்கு ஆலைகளில் போதிய இரும்பைத் தயாரிக்க வேண்டும்" என்று மத்திய அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

'மத்திய அரசின் பொருளாதார—வரி விதிப்பு முறைகளே விலையேற்றத்திற்குக் காரணம்'

'தரமான பொருட்களையே மக்கள் வாங்கவேண்டும்—குறைந்த விலையைக் கண்டு மக்கள் ஏமாறக் கூடாது'

தொழில் அமைச்சர் செ. மாதவன் வற்புறுத்தல்

சென்னை, நவ. 17—

"இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வுக்கு மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளும் வரி விதிப்பு முறைகளுங்கூடக் காரணமாக இருக்கும்"

என்று தமிழகத் தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள், தென்னிந்திய நுகர்வோர் சங்கத்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்; இதைத் தம்முடைய சொந்தத் தனிப்பட்ட கருத்தாகக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

விலைகளைக் குறைப்பதற்கு பொருளாதாரக் கொள்கைகளையும்—வரி விதிப்பு முறைகளையும் எவ்வாறு மாற்ற வேண்டும் என்பதை ஆலோசித்து அரசாங்கத்துக்குக் கூறும்படி சங்க நிர்வாகிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

"மாநிலத்துக்கு மாநிலம் நடைபெறும் இன்றியமையா உணவுப் பொருள்கள் போக்குவரத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துவது விலைவாசி உயர்வைத் தடுக்க உதவும்" என்று அமைச்சர் யோசனை சொன்னர்.

"தரமான பொருட்களையே வாங்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்த முயலவேண்டும்" என்றும் அவர் நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டார்.

"குறைந்த விலையைக் கருதி மக்கள் ஏமாறக்கூடாது" என்று கேட்டுக்கொண்ட அமைச்சர், கலப்படத்தைத் தடுக்கத் தகுந்த யோசனைகளைத் தெரிவிக்குமாறு கழக நிர்வாகிகளுக்கு யோசனை கூறினர்.

யாகியா கான் ஆட்சிக்கு அழிவு நெருங்குகிறது

டாக்காவில் மரண அமைதி நிலவுகிறது

ஊரடங்கு உத்தரவு--பலர் படுகொலை--138 பேர் கைது

விடுதலை வீரர்கள் பெற்றுவரும் வெற்றிகளைக் கண்டு திகைப்பு

புதுடில்லி, நவ. 18—

வங்க தேச விடுதலைப் படையினர் நாளும் பெற்று வரும் பெரும் வெற்றி காரணமாகவும் -- விடுதலைப் படையினரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமலும் திணறிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் இராணுவம் நேற்று டாக்காவில் மீண்டும் படுகொலை செய்யும் பணியைத் தொடங்கியிருக்கிறது.

இதற்காக அவர்கள் நேற்று காலை 5 மணியளவில் ஊரடங்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து -- வீட்டுக்கு வீடு புகுந்து கொரில்லாக்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பல இடங்களிலும் இராணுவம் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்றும், கைகலப்பில் விடுதலைப் படையினர் பலர் இறந்துவிட்டதாகவும் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது; ஆனால், இராணுவத்தினர் இறந்தது பற்றி தகவல் எதையும் அது வெளியிடவில்லை.

விடுதலைப் படையினர் பெற்றுவரும் வெற்றி உண்மையானதுதான் என்பதை இராணுவம் ஒப்புக்கொண்டது; 'வன்முறையாளர்களின் தாக்குதலிலிருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்றவே ஊரடங்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது' என்று இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

" இராணுவத்தினர் கொரில்லாக்களைத் தேடும் முயற்சியின்போது, 'இந்திய ஏஜெண்டுகள் நால்வர் கொல்லப்பட்டனர்; 138 'இந்திய ஏஜெண்டு'கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் " என்றும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

பாகிஸ்தான் இராணுவம் இந்த வெறித் தாக்குதல் நடத்தியதற்கு, விடுதலைப் படையினர் பெற்றுவரும் வெற்றிகளே காரணமாகும்.

விடுதலை வீரர்கள் பல இடங்களை மீட்டனர்

விடுதலைப் படையினர் கிழக்கு வங்கத்தில் பல பகுதிகளை மீட்கத் தொடங்கிவிட்டனர்.

ஜெஸ்சூர் மாவட்டத்தில் 1,000 சதுர கிலோமீட்டர் பகுதியை விடுதலைப் படையினர் மீட்டுள்ளனர்; இப்பகுதிகள் இவர்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன.

இதுபோல் ரங்கப்பூர் மாவட்டத்தின் பதேசுவரி பகுதியையும் விடுதலைப் படையினர் கடும் போராட்டத்துக்குப் பின்னர் மீட்டுவிட்டனர்.

விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர்

பாகிஸ்தான் விமானம் ஒன்றை விடுதலைப் படையினர் தரையிலிருந்தே சுட்டு வீழ்த்தி அழித்திருக்கின்றனர்; அதன் விமானியும் கொல்லப்பட்டனர்.

சிட்டகாங் துறைமுகத்தில் மாது காப்பாகக் கப்பல்கள் சென்று வர இயலாத நிலை இருந்துவருகிறது; கடந்த 13-ந் தேதியன்று 'பெர்லின்' என்ற கப்பல் வெடிவிபத்தால் பலத்த சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறது; மேலும் இரு கப்பல்கள் தாக்குதல்களால் சேதமடைந்தன.

பாலம் தகர்ப்பு

அதே நாளன்று சில்ஹெட் பகுதியில், 'சுனம்கஞ்ச்' எனும் பகுதியில் முக்கியமான பாலம் ஒன்றை விடுதலைப் படையினர் தகர்த்தனர்.

ஆயுதங்களைக் கைப்பற்றினர்

இராணுவத்துக்கு உதவியாக இருந்துவரும் ரசாக்கர்கள் பலரைக் கொன்று அவர்களிடமிருந்த ஆயுதங்களையும்--வெடி மருந்துகளையும் விடுதலைப்படையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

விடுதலைப் படையினரின் இந்த வெற்றிகள்தான் மேற்குப் பாகிஸ்தான் இராணுவ வெறியர்கள் மீண்டும் படுகொலையைத் துவங்கியதற்குக் காரணமாகும்.

டாக்காவில் பெரும் அச்சம்

போர் தவிர்க்க முடியாததாம்

வெளிநாட்டினர் நிலை

நிலவிவரும் நிலைமையைப் பார்த்தால், 'போர் தவிர்க்க முடியாததாகிவிடும்' என்று டாக்காவாழ் வெளிநாட்டினர் கருதுகிறார்களாம்.

இரவு நேரத்தில் நகரெங்கும் மரண அமைதி நிலவுவதாகவும், அவ்வப்பொழுது விடுதலைப் படையினர் இராணுவத்தைத் தாக்கும் வெடிச் சத்தங்கள் மட்டுமே கேட்கப்படுவதாகவும் வெளிநாட்டினர் கூறுகின்றனர்.

பகலெல்லாம் மக்கள் அமைதியாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவும், ஆயினும் அண்மையில் ஏற்பட்ட கொரில்லாத் தாக்குதல்கள் மக்களை அச்சம் கொள்ளச் செய்திருப்பதாகவும் அமெரிக்கர் ஒருவர் கூறினார்.

இராணுவப் பரிசோதனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

குறுகிய தூரம் போவதற்குள் கூட ஐந்தாறு தடவைகள் இராணுவத்தினர் சோதனையிட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

நெருக்கடி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் 200 அமெரிக்கர் உட்பட வெளிநாட்டினர் அனைவரும் போர் அறிகுறிகளை எதிர்பார்த்தே இருக்கின்றனர்.

அண்மையில் அமெரிக்கத் தூதரகம் அமெரிக்கக் குடிமக்களை அழைத்து, நெருக்கடி நேரத்தில் நடந்துகொள்ள வேண்டியவிதம் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறது.

இரயிலைத் தகர்த்தனர்

நேற்று இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற தனி இரயில் ஒன்றை விடுதலைப் படையினர் வெடி வைத்துத் தகர்த்திருக்கின்றனர்.

டாக்கா கவர்னர் அஞ்சுகிறார்

அமைச்சர்களுக்கும் அதே நிலைதானும்

முஜீப் நகர், நவ. 19—

வங்காள தேசத்தின் (கிழக்குப் பாகிஸ்தானின்) தலைநகரான டாக்காவில் விடுதலைப் படையைச் சேர்ந்த கொரில்லா வீரர்களின் தாக்குதல்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

டாக்காவில் மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களின் சார்பில் அங்கு கவர்னராக உள்ள டாக்டர் ஏ. எம். மாலிக், காரில் வெளியே செல்வதற்குக்கூட அஞ்சுகிறார்.

அவருடைய இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு அவர் காரில் செல்வதில்லை; ஒரு ஹெலிகாப்டரையே பயன்படுத்துகிறார்.

அவருடைய அமைச்சர்கள் முசாபரி பங்களாவிலேயே காலம் கழிக்கிறார்கள்; அங்கிருந்து அவர்கள் வெளியே வருவதே கிடையாது; அமைச்சக வேலைகளைக்கூட அவர்கள் அங்கிருந்தே செய்கிறார்கள்.

1,200 சதுர மைல் நிலப்பரப்பு விடுபட்டன

பாகிஸ்தான் இராணுவத்தின் பிடியிலிருந்த பகுதியில் நிர்வாகச் சீரமைப்பு

கிழக்கு வங்கத்தில் ரங்கப்பூர் மாவட்டத்தில் 1,200 சதுர மைல் நிலப்பரப்பும் -- 7 இலட்சம் மக்களும் கொண்ட மொத்தம் 8 தாணக்கள் மேற்குப் பாகிஸ்தான் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுபட்டிருக்கின்றன.

இப்பகுதியில் கிராமங்கள் -- வட்டார அளவில் சிவில் நிர்வாகச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நீதிமன்றங்கள் -- போலீசு -- சிறைகள் அமைத்துள்ளன.

துவக்கப் பள்ளிகள் அளவு வரை கல்விச்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் படையினர் டாக்காமீது பாய்வர்

2,000 கொரில்லாக்கள் தயாராக உள்ளனர்

இலண்டன், நவ. 18—

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காமீது பாயும் நேரத்தை விடுதலைப் படை வீரர்கள் நோக்கிக் கொண்டிருக்கின்றனர்; இதற்குத் தயாராக 2,000 கொரில்லாக்கள் ஏற்கனவே அப்பகுதியைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களுடைய முயற்சி வெற்றி பெறுமா? -- அடுத்த சில வாரங்களில் இவர்களுக்குத் தேவையான வெடி மருந்துகள் கிடைப்பதைப் பொறுத்துத்தான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

முஜிபுர் ரகிமான் மீது விசாரணை

தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தகவல்

வாஷிங்டன் நவ. 18—

அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமான் மீதான விசாரணை இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகப் பாகிஸ்தான் வெளிநாட்டுச் செயலாளர் சுல்தான் முகமது கான் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேற்குப் பாகிஸ்தான் சிறை ஒன்றில் நான்கு வாரங்களுக்கு முன் முஜிபுர் ரகிமானைத் தாம் கண்டதாக முஜிபுரின் முன்னாள் பொருளாதார ஆலோசகராக இருந்த ரகிமான் ஷோபன் என்பவர் தெரிவித்தார்.

வங்க தேசப் பிரதிநிதியாக இவர் இப்போது உலகெங்கும் சென்று கொண்டிருக்கிறார்.

நெருக்கடி கட்டம் ஏற்பட்டுவிட்டது

போர் மூளாமல் தடுக்க பிரிட்டிஷ் இதழ் யோசனை

இலண்டன், நவ. 18—

"வங்க நெருக்கடி அபாயகரமான கட்டத்தை எட்டிவிட்டது; பாகிஸ்தானுடன் போர் புரிய வேண்டும் என்று இந்திரா எண்ணுவதற்கான தூண்டுகோல்கள் பலமாக இருக்கின்றன "

என்று பிரிட்டிஷ் பத்திரிகையான 'பைனான்ஷியல் டைம்ஸ்' கூறியிருக்கிறது.

"சர்வதேசநாடுகள் யாகியாகான் மீது மறுக்க முடியாத அளவுக்கு நிர்ப்பந்தங்களைப் பயன்படுத்தி -- அதேபோல் இந்தியாவையும் நிதானம் காட்டும்படி செய்தால்தான் இந்தத் துணைக்கண்டத்தைப் போரிலிருந்து காக்க முடியும்" என்று அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

மலிவு விலை நூல்கள் கண்காட்சி

சென்னை அமெரிக்க நூலகத்தில் நடைபெறுகிறது

சென்னை, நவ. 18—

மலிவு விலை நூல்கள் கண்காட்சி இங்குள்ள அமெரிக்க நூலகத்தில் நடைபெறுகிறது.

அமெரிக்காவில் மலிவு விலை நூல்கள் பெற்றுள்ள சிறப்பையும் செல்வாக்கையும் விளக்குவதாக இக்கண்காட்சி அமைந்திருக்கிறது.

'மலிவு விலை நூல் அரங்கு' என்று குறிப்பிடப்பெறும் இந்த நூல் கண்காட்சி இரு வாரங்கள் நடைபெறும்.

தென்னிந்திய நூல் விற்பனையாளர் -- வெளியீட்டாளர் சங்கமும் -- சென்னையிலுள்ள அமெரிக்கத் தகவல் நிலையமும் (யு. எஸ். ஐ. எஸ்) கூட்டாக இக்காட்சியை நடத்துகின்றன.

அண்மை ஆண்டுகளில் மலிவு விலை நூல்களின் விற்பனை வாய்ப்பு இடையறாமல் பெரிதும் வளர்ந்து வந்துள்ளது; நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 90,000 நூல்கள் அச்சாகி வருகின்றன; ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 1,000 புதிய நூல்கள் வெளிவருகின்றன.

உலக நாடுகளின் உறவுகள் -- சுற்றுச் சூழ்நிலைக் கேடுகள் -- மக்கள் தொகை -- உலகில் நகரங்கள் வளர்ச்சி--வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஏற்படுத்தி வரும் விளைவுகள் போன்ற விரிவான பல துறைகள் பற்றிப் புதிய நூல்கள் வெளிவருகின்றன.

மலிவு விலை நூல்கள் அரங்கில் மாறுதல் விரும்பும் புதிய குரல்களும், நடப்பு நிலை நீடிப்பை விரும்பும் பழைய குரல்களும் இடம் பெற்று, இலக்கிய அன்பர்களின் கருத்தை ஈர்க்க முயல்கின்றன.

நவம்பர் 30 முடிய கண்காட்சி காலை 9.30 முதல் மாலை 6 மணி முடியத் திறந்திருக்கும்; பொது மக்கள் கட்டணம் ஏதுமின்றி வந்து பார்வையிடலாம்.

5,400 டன் குறுவை நெல் கொள்முதல்

சென்னை, நவ. 18—

இம்மாதம் 15-ந் தேதி வரை, உணவுக் கார்ப்பரேஷன், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,400 டன் குறுவை நெல்லைக் கொள்முதல் செய்திருக்கிறது.

நவம்பர் 4-ந் தேதியிலிருந்து மாநில அரசு நடைமுறைப்படுத்திவரும் 25 சதவிகித லெவி முறையின்கீழ் இந்த நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

மொத்தம் லெவி முறையில் எவ்வளவு குறுவை நெல் கிடைக்கும் என்பதை இப்போது கூற முடியாது என்றாலும் சுமார் 15,000 டன் கொள்முதல் செய்ய முடியும் என்று மதிப்பிடப்படுகிறது. இந்தக் கொள்முதல் விரைவில் முடிந்துவிடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு [illegible]